DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,

RAMANATHAPURAM

**S.T.C.No.1185/2022**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW2 | Caste | : | |
| Name | : | கலாராணி | Age | : | 32 |
| W/o. | : | நல்லசேகர் | Occupation | : | கூலி வேலை |
| Village | : | ஆண்டிதேவன் வலசை | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 05th day of December 2023.

**05.12.2023**

**( எதிரி ஆஜர்)**

**(சாட்சி குவிமுச பிரிவு 311ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்).**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு 2011ம் ஆண்டு திருமணம் நடந்தது. நான் எனது கணவருடன் துத்திவலசையில் ஐந்து மாதங்கள் இருந்தேன். அதன் பிறகு ஆண்டிதேவன் வலசையில் உள்ள எனது அப்பா வீட்டிற்கு வந்துவிட்டேன். எனக்கும், எனது மாமியாரான எதிரிக்கும் மேற்சொன்ன ஐந்து மாதங்களில் வாய் தகராறு ஏற்பட்டன. அதன் பின்பு எனக்கும், எனது மாமனார், மாமியாருக்கும் எந்தவித பேச்சு வார்த்தையும் இல்லை. எனது தம்பி கடந்த 11.11.2019ம் தேதி துத்திவலசையில் 4 1/2 செண்ட் நிலம் வாங்கிய விபரம் எனது மாமனார், மாமியாருக்கு தெரியுமா என்றால் தெரியாது. சப்போட்டா மரத்தையும், முருங்கை மரத்தையும் யார் அந்த இடத்தில் வைத்தது, வளர்த்தது என்றால் நாங்கள் நிலத்தை வாங்கும்போதே அவைகள் அங்கு இருந்தன. 2020ம் ஆண்டு இராமேஸ்வரம் மகளிர் காவல் நிலையத்திலும், உச்சிப்புளி காவல் நிலையத்திலும் எதிரி மீதும், எனது மாமனார் மீதும் புகார் அளித்திருந்தேன் என்றால் சரிதான். உச்சிப்புளி காவல் நிலையத்தில் எனக்கு சேர வேண்டிய 9 பவுன் தங்க நகையை கொடுத்தார்கள் என்றால் சரிதான். எனக்கு இன்னும் 9 பவுன் தங்க நகை தருவதாக சொல்லி இராமேஸ்வரம் மகளிர் காவல் நிலையத்தில் எனது மாமனார் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எனது கணவர் என்னிடம் பேசாததாலும் நான் உச்சிப்புளி காவல் நிலையத்திலும், இராமேஸ்வரம் மகளிர் காவல் நிலையத்திலும் கொடுத்த புகார் மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்காததாலும் இந்த வழக்கை பொய்யாக ஆஜர் எதிரி மீது தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை

**(ஒப்பம்/-க.பிரபாகரன்)**

**நீதித்துறை நடுவர் எண்.2,**

**இராமநாதபுரம்.**